**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,

குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 110/2020**

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பணக்கார்சி | தொழில் | : கூலி வேலை |
| கணவர் பெயர் | : பெருமாள் | சமயம் | : |
| கிராமம் | : தையூர் | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 67 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 – 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் தையூர் கிராமத்தில் வசிக்கிறேன். பட்டியல் சாட்சி 2 குருநாதன் எனக்கு உறவினர். பட்டியல் சாட்சி 3 சசிக்குமார் எனது மகன். ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரை சார்ந்தவர்கள்.

2. கடந்த 6 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் அய்யனார் கோவிலுக்கு லைட் செட்டிங் போட்டிருந்தார். அப்போது கோவிலில் மாயக்கண்ணன் என் மகன் சசிக்குமாரிடம் சண்டை போட்டார். என் மகன் வீட்டிற்கும் வந்துவிட்டார். பின்னர், மாயக்கண்ணன் வீட்டின் முன்பாக ரோட்டில் சென்றபோது என் மகன் சசிக்குமாரை மாயக்கண்ணன் அடித்துவிட்டார். நான் தடுக்க சென்றபோது என் தாடையில் மாயக்கண்ணன் அடித்துவிட்டார். அப்போது இரவு 8 மணி இருக்கும். அதன்பிறகு என் ஊரைச்சார்ந்த குருநாதன் என்பவரும் வந்து மறித்தபோது குருநாதனை மாயக்கண்ணனும் மாயக்கண்னின் மகன் லெனினும் அடித்து விட்டார்கள். பிறகு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் விசாரித்தனர்.

**( 1. 22.07.2019 தேதியிட்ட புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்குவிசாரணை:**

3. புகாரை யார் எழுதியது என்றால் அது தெரியாது. புகாரில் என்ன எழுதியிருந்தது என்றால் எனக்கு படிக்க தெரியாது. அய்யானார்

கோவிலில் இருந்து எவ்வளவு தூரத்தில் சம்பவம் நடந்தது என்றால் 1 கி.மீ. தூரம் இருக்கும். அய்யனார் கோவிலில் நடந்த சம்பவம் பற்றி நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த பிறகு எத்தனை நாள் கழித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் 2 நாள் கழித்து கொடுத்தேன். எந்த தேதியில் போலிசார் விசாரித்தார்கள் என்றால் 3ம் நாள் விசாரித்தார்கள். சண்டையின் போது எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் இருட்டாக இருந்ததால் தெரியாது. என் மகன் சசிக்குமார், தென்னரசு, மகேஷ், கிருஷ்ணமூர்த்தி, மணிவண்ணன், விநாயகமூர்த்தி ஆகியோர்கள் சேர்ந்து எதிரிகளை தாக்கியதாக தமிழ்வாணன் செஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் சி.சி.நெம்பர் 209/2020 என்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி எனது மகன் மற்றவர்களிடம் கூடிக்கொண்டு தமிழ்வாணனின் கையை உடைத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு போனேனா என்றால் இல்லை. என் மகன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றாரா என்றால் இல்லை. தையூரில் 2 குரூப்பாக உள்ளது என்றால் அது தெரியாது. தென்னரசு என்பவர் 20 வருடத்திற்கு முன்பாக ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது 5ம் எதிரி திருமுருகன் தான் தையூர் ஊராட்சி மன்ற தலைவராக உள்ளார் என்றால் சரிதான்.

4. என் மகன் லைட் போட்ட அய்யனார் கோவிலுக்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் அது தெரியாது. 1ம் எதிரி மாயக்கண்ணன் தையூரில் அஞ்சல் துறையில் கிளை மேலாளராக வேலை பார்த்தார் என்றால் தெரியும். மாயக்கண்ணன் பம்பு செட் நிலம் அய்யனார் கோவிலை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். மாயக்கண்ணனின் நிலத்தில் இருந்த மின்சாரத்தை அனுமதி இல்லாமல் எனது மகன் லைன் போட்டு மின்சாரம் எடுப்பதை மாயக்கண்ணன் கேட்டார் என்றால் சரிதான். ஒவ்வொரு வருடமும் அங்குதான் மின்சாரம் எடுப்பார்கள் என்று சாட்சி கூறுகிறார். தென்னரசுக்கு எதிர் குரூப் தான் ஆஜர் எதிரிகள் என்றால் அது எனக்கு தெரியாது. நானும், என் மகனும் தென்னரசுக்கு ஆதரவாக செயல்படுவோம் என்றால் சரியல்ல. குருநாதனுக்கு எந்த இடத்தில் அடிப்பட்டது என்றால் அது தெரியவில்லை. குருநாதன் மருத்துவமனையில் சேர்ந்தாரா என்றால் அது தெரியாது. குருநாதனை எந்த தேதியில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் தேதி தெரியவில்லை. என் மகன்தான் மருத்துவமனையில் சேர்த்தார். என் மகனுக்கு எதிராக ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டதால் பொய்யாக எதிரிகளுக்கு எதிராக வழக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் சம்பவம்

உண்மையாக இருந்திருந்தால் அன்றைய தினமே காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரை தென்னரசால் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மின்சாரம் மாயக்கண்ணன் நிலத்தில் இருந்து என் மகன் எடுத்ததால் மின் வாரியத்திற்கு தெரிந்தால் அபராதம் கட்ட சொல்வார்கள் என்று கருதி என் மகனிடம் கேட்டதற்கு நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஊரில் திருவிழா 2 குரூப்பாக நடக்கும் என்றால் அது தெரியாது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**
இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.